பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண். 578 நாள்: 16.10.2026

**மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. ப. வெங்கடரமணன் அவர்கள், மயிலாப்பூர், லஸ் சர்ச் சாலையில் ரூ.8.49 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட நாகேஸ்வரராவ் பூங்காவினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.**

இன்று (16.10.2026) மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.ப.வெங்கடரமணன் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலம், வார்டு-123க்குட்பட்ட மயிலாப்பூர், லஸ் சர்ச் சாலையில் நமக்கு நாமே திட்ட நிதியில் ரூ.8.49 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட நாகேஸ்வரராவ் பூங்காவினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்துப் பார்வையிட்டார். பின்னர், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பூங்காவில் மரக்கன்றினை நட்டார்.

இந்தப் பூங்கா 4 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இதில் மேம்பாட்டுப் பணிகளில் நடைபயிற்சி மேற்கொள்ள ஏதுவாக 1,600 மீட்டர் நீளத்திற்கு நடைபாதைகள், பூங்காவின் அழகை மெருகேற்றுவதற்கு இரண்டு நீரூற்றுகள், பொழுதுபோக்கு வசதிகளுக்காக, 7,532 சதுர அடி பரப்பளவில் குழந்தைகளுக்கான விளையாட்டுப் பகுதி, 3,228 சதுர அடி பரப்பளவில் இறகுப்பந்து விளையாட்டு மைதானம், பசுமைப் பரப்பை அதிகரிக்கும் வகையில் 4,800 சதுர அடி பரப்பளவிலான மெக்சிகன் புல்வெளி (Mexican lawn) உட்பட மொத்தம் 52,000 சதுர அடி பரப்பளவில் பசுமையான சூழல், பூக்கும் தாவரங்கள், அலங்காரச் செடிகள், பனை வகை மரங்கள் மற்றும் மூங்கில் என மொத்தம் 28 வகையான தாவரங்கள் நடப்பட்டுள்ளன.

மழைநீர் தேங்குவதைத் தவிர்க்கும் வகையில், பூங்காவிற்குள் பெய்யும் மழைநீரைச் சேகரித்து வெளியேற்றும் வகையில் 195 மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகாலும், 1,076 சதுர அடி பரப்பளவில் மழைநீர் சேகரிப்பு மேலாண்மை வசதியும் உருவாக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள், வார்டு-124க்குட்பட்ட சாரதாபுரம் கால்வாய்க்கரை சாலையில் 2025-26ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பல்நோக்குக் கட்டடத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

பின்னர், அருகிலுள்ள குழந்தைகள் மையத்தினைப் பார்வையிட்டு, அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, குழந்தைகளுடன் கலந்துரையாடினார்.

இந்நிகழ்ச்சிகளில், மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., மாமன்ற உறுப்பினர் திருமதி மோ. சரஸ்வரி, மண்டல அலுவலர் திரு.எஸ்.செந்தில்குமரன், செயற்பொறியாளர் திருமதி வித்யா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள்தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**